# துணைவிதிகள்

## குருநாகல் மாநகர சபை

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் குருநாகல் மாநகர சபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 05 ந் உ.

### துணைவிதிகள்

குருநாகல் மாநகர சபையினால் ஆக்கப்பட்டு 08.09.72 இன் 24 ஆம் இலக்க அரசாங்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட நகர மண்டபத் துணை விதிகள் அதனோடுள்ள அட்டவணைக்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

அட்டவணை

குருநாகல் மாநகர சபையின் நகரமண்டபத்தை உபயோகிப்பதற்கான கட்டணங்கள்

| | தினமொன்றுக்கு ரூ. ச. | மணித்தியாலமொன்றுக்கு ரூ. ச. | ஆகக்குறைந்த கட்டணம் ரூ. ச. | பிணைப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. சொந்தப் பண வருவாய்க்காக ஒரு நாளில் ஒரு தரம் மட்டும் அரங்கேற்றப்படும் பகிரங்க அரங்கேற்றத்துக்கு .. .. .. | 250 0 | 15 0 | 250 0 | 100 0 |
| 2. அதே நாளில் அடுத்து நடத்தப்படும் ஒவ்வொரு அரங்கேற்றத்துக்கும் .. | 100 0 | — | — | — |
| 3. சொந்தப் பண வருவாய்க்காகவன்றி ஏதேனும் சமய, கல்வி, பொதுநல கலாச்சார அல்லது தரும நோக்கமாக நடத்தப்படுகின்றதென ஆணையாளர் திருப்திப்படும் பகிரங்க அரங்கேற்றத்துக்கு .. .. | 150 0 | 15 0 | 150 0 | 50 0 |
| 4. கலியாணம் அல்லது வேறு தனிப்பட்டவரது சமூக நிகழ்ச்சிக்கு .. | 150 0 | 15 0 | 75 0 (6 மணி) | 50 0 |
| 5. சொந்தப் பண வருவாய்க்காக நடாத்தப்படாத விநோதக் காட்சி அல்லது வேடிக்கைக் காட்சிக்கு .. .. .. | 100 0 | 15 0 | 75 0 (6 மணி) | 50 0 |
| 6. கட்டணத்துடன் ஆட்களை அனுமதிக்கும் பொது விருந்துகள் முதலியன அல்லது ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு .. .. | 125 0 | 15 0 | 75 0 (6 மணி) | 50 0 |
| 7. நகரமண்டபத்தை ஒதுக்கியிருக்கும் பகிரங்க அரங்கேற்றம் ஒன்றுக்கான ஆடை அலங்கார ஒத்திகை ஒன்றுக்கு .. .. | — | 7 50 | 20 0 (3 மணி) | — |
| 8. மகாநாடு, கூட்டம், உரையாற்றல் பரிசுவழங்கல், சமய அனுட்டானம் பயிற்சி அல்லது படிப்பு வகுப்புக்கு .. .. .. | 50 0 | 10 0 | 20 0 (3 மணி) | 25 0 |
| 9. மேலே விவரிக்கப்படாததும் சொந்த வருவாயின் பொருட்டு நடத்தப்படுவதுமான நிகழ்ச்சி எதற்கும் .. .. .. | 300 0 | 20 0 | 30 0 (2 மணி) | 50 0 |
| 10. மேலே விவரிக்கப்படாததும் சொந்த வருவாயின் பொருட்டு நடத்தப்படாததுமான நோக்கம் எதற்கும் .. .. .. | 75 0 | 10 0 | 20 0 (3 மணி) | 50 0 |
| 11. அனுமதிப்பதற்கு அல்லது பங்குபற்றுவதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படாத நாடகம் கதம்பம் அல்லது வேறு களியாட்டம் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு அல்லது நடன நிகழ்ச்சிக்கு .. | 100 0 | 10 0 | 50 0 (6 மணி) | 50 0 |
| 12. கட்டணத்துடன் ஆட்களை அனுமதிக்கும் நடன விருந்துக்கு .. | 150 0 | 15 0 | 75 0 (6 மணி) | 50 0 |

2–677—28.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 153

---

## குருநாகல் மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச்சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின்கீழ் குருநாகல் மாநகரசபையால் ஆக்கப்பட்டவையும் அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும், தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டவையுமான துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 07 ந் உ.

### துணைவிதிகள்

1. சந்தர்ப்பம் வேறுவகையில் இருந்தாலன்றி இத்துணைவிதிகளில்—

"ஆணையாளர்" எனில், (262 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மாநகர ஆணையாளர் எனப் பொருள்படும்.

"உத்தரவுபெற்ற மனையகம்" எனில் இத்துணைவிதிகளின் கீழான ஒரு உத்தரவுப்பத்திரத்தை வைத்திருப்பவர் அதில் பன்றிகளை வைத்திருப்பதற்கு அல்லது வளர்ப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மனையகம் எனப் பொருள்படும்.

2. ஆணையாளரால் அதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒரு வருடாந்த உத்தரவுப்பத்திரம் ஒன்றை வைத்திருப்பவராக இருந்தாலன்றி எவரும் குருநாகல் மாநகரசபை எல்லைகளுக்குள் பன்றிகளை வைத்திருக்கவோ அல்லது வளர்க்கவோ கூடாது.

3. இதன் பின்னுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு முன்னரே அழிக்கப்பட்டாலன்றி இத்துணைவிதிகளில் கீழான ஒவ்வொரு உத்தரவுப் பத்திரமும், அது வழங்கப்பட்ட வருடத்தி திசம்பர் முப்பத்தோராந் தினம்வரையும் வழக்கில் இருக்கும்.

4. இத்துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு உத்தரவுப் பத்திரத்துக்கும், சபையினுல் விதிக்கப்பட்டுள்ளவாறுன விகிதம், ஒரு கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

5. இத்துணைவிதிகளின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப்பத்திரம் எதுவும் மாற்றிக் கொடுக்கப்படுதல் கூடாது.

6. அம்மனையகமும் அங்கு உபயோகிக்கப்படவிருக்கும் பட்டியும் பின்வரும் நிபந்தனைகளுக்கு இணக்கமாக இல்லாதிருப்பின் எம்மனையகத்தின் பொருட்டும் உத்தரவுப்பத்திரம் வழங்கப்படுதல் கூடாது.

(அ) அமைப்பிடம் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மனையகத்துக்கு தகுதியானதும் போதிய அளவானதுமான தண்ணீர் விநியோகம் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) மனையகத்துக்குப் போதிய நீர்வடிதற்கான வசதிகள் இருக்க வேண்டும்.

(ஈ) பட்டி சிமெந்தினுல் அல்லது வேறு நீர் சுவருத பொருளினுலான தளத்தையுடையதாக இருக்கவேண்டியதோடு, குறைந்தது மூன்றடி உயரமுடையதும் சிமெந்து பூசப்பட்டதுமான ஒரு சுவரினுல் சூழப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) பட்டி, குடியிருக்கும் வீடு அல்லது வீதி எதிலுமிருந்து குறைந்தது ஐம்பது அடி தூரத்துக்சப்பால் அமைந்திருத்தல் வேண்டும்.

(ஊ) பன்றிகள் வைத்திருப்பதனுல் உண்டாகும் மலம், அழுக்குகள், அல்லது வேறு அருவருப்பான அல்லது தீங்கான பொருட்களைப் போட்டு வைத்திருப்பதற்காக அம்மனையகத்தில் கொசு நுளையமுடியாத தொட்டியொன்று வைத்திருக்கப்படல் வேண்டும்.

(எ) பட்டியையடுத்தாற்போல் பன்றிகள் வெளியேறி அதனைவிட்டு வேறெங்கும் அலைய முடியாதவாறு அடைக்கப்பட்டு ஒரு அளவு இருத்தல் வேண்டும்.

7. ஆணையாளரோ அல்லது ஆணையாளரால் பொதுவாக அல்லது விசேஷமாக எழுத்தில் அதன் பொருட்டு அதிகாரங் கொடுக்கப்பட்ட சபையின் எவ்வுத்தியோகத்தருமோ உதய காலத்துக்கும் அஸ்தமன காலத்துக்கும் இடைப்பட்ட நியாயமான எல்லா நேரத்திலும் உத்தரவு பெற்ற எம்மனையகத்தினுள்ளும் பிரவேசித்துச் சோதிப்பது சட்ட பூர்வமானதாகும்.

8. உத்தரவுபெற்ற மனையகம் உத்தரவுப்பத்திரம் வழங்குதற்காக இடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கிணக்கமாக இல்லாதிருக்கும் பட்சத்தில், ஆணையாளர், உத்தரவுப் பத்திரகாரருக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கொடுத்து, அந்நிபந்தனைகளுக்கிணக்கமாக அம்மனையகத்தை வைத்திருத்தற் பொருட்டு அவ்வறிவித்தலில் சொல்லப்பட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரலாம்.

9. எக்காரணத்தைக் கொண்டும், 8 ம் துணைவிதியின்படியான அறிவித்தலை நேரடியாக ஒரு உத்தரவுப்பத்திரகாரருக்கு வழங்க முடியாதிருப்பின், அவர் கடைசியாக வாசஞ் செய்ததாக அறியப்பட்ட இடத்தில் அது விட்டுச் செல்லப்பட்டால் அல்லது உத்தரவுபெற்ற மனையகத்தினுள்ள வெளிப்படையான ஒரு பொருளின் மீது ஒட்டி விடப்பட்டால் அல்லது வெளிப்படையான இடத்தில் வைக்கப்பட்டால் அவ்வறிவித்தல் முறைப்படி அவருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

10. உத்தரவுப்பத்திரக்காரர், தமக்கு வழங்கப்பட்ட எவ்வறிவித்தலிலும் கேட்கப்பட்டவற்றுக்கு, அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கக் கூடிய காலத்துள், காலம் குறிப்பிடப்படாதிருப்பின், அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், பணிந்து நடக்க வேண்டும்.

11. உத்தரவுப்பத்திரகாரர் ஒவ்வொருவரும் உத்தரவுபெற்ற மனையகத்தைச் சுத்தமானதும் சுகாதாரமானதுமான நிலையில் வைத்திருத்தல் வேண்டும்

12. உத்தரவுபெற்ற மனையகத்தில் வைத்திருக்கும் பன்றிகளுக்கேற்படும் நோய் அல்லது மரணம் எதனையும் உத்தரவுப்பத்திரக்காரர் உடனடியாக வைத்திய சுகாதார உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

13. உத்தரவுபெற்ற மனையகத்தில் பன்றி எதுவும் நோயினுல் சாக நேர்ந்தால் வைத்திய சுகாதார உத்தியோகத்தரின் முன்னங்கீகாரமின்றி அத்தகைய பன்றியைப் புதைக்கவோ அல்லது வேறு வகையில் அதன் பிண்டத்தை அப்புறப்படுத்தவோ கூடாது.

14. பன்றி எதுவும் அதன் சொந்தக்காரருடைய உத்தரவுபெற்ற மனையகத்துக்கு வெளியே அலைந்து திரியக் காணப்பட்டால் ஆணையாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எந்த நபரும் அதனைக் கைப்பற்றுதலோ அல்லது கைப்பற்றச் செய்தலோ சட்டபூர்வமானதாகும்.

15. இத்துணைவிதிகளில் எதனையும் மீறி நடக்கும் ஒவ்வொரு செயலும் 50 ரூபாவுக்கு மேற்படாத அபராதத்திஞலும் அக்குற்றச் செயலைத் தொடர்ந்தும் செய்யின், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அம்மீறிய செயலைப் பற்றி எழுத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர், அக்குற்றச் செயலைத் தொடர்ந்து செய்யும் ஒவ்வொரு தினத்துக்கும் மேலதிகமாக 15 ரூபாவுக்கு மேற்படாத அபராதத்திஞலும் தண்டிக்கப்படற்பாலதாகும்.

16. இத்துணை விதிகளில் எதனையும் மீறி நடந்ததற்காக உத்தரவுப்பத்திரக்காரர் ஒருவர் குற்றவாளியென இரண்டாந் தடவையாக அல்லது அதன் பின் கோட்டினுல் தீர்ப்பளிக்கப்படுகையில், அம்மீறிய செயலுக்காகச் சட்டப்படி விதிக்கப்படும் வேறு எதும் தண்டனைக்குப் பாதகமில்லாமல் அவர் வைத்திருக்கும் உத்தரவுப்பத்திரத்தையும் அத்தகைய கோடு அழித்து விடலாம்.

2–768—28.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 153

